மாண்புமிகு திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி செய்து தருவது குறித்து 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் பிரிவு 10 மற்றும் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகள் 20 முதல் 28 வரை உரிய விதிகள் வரையறை செய்யப்பட்டுள்ளன. மேற்படி சட்ட விதிகளின் அடிப்படையில் தோட்ட நிர்வாகங்களால் தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், வால்பாறையில் இருக்கக்கூடிய இ.எஸ்.ஐ. மருத்துவமனையின் அபிவிருத்தி திட்டத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். அவர்கள் நேரடியாகச் சென்று பார்த்ததுபோல் நானும் பல தடவை அந்த மருத்துவமனைக்குச் சென்று பார்த்திருக்கிறேன். படிப்படியாக அந்த இடத்திலே போதுமான கட்டடங்கள் கட்டுவதற்கு இடம் போதாது. அந்த இடத்திற்குப் பக்கத்தில் உள்ள இடத்தை வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அந்த மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அந்த இடத்தைப் பெற்றுக் கொடுத்து அதற்கான அபிவிருத்தி திட்டத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் மருத்துவ வசதிக்காக மத்திய அரசு கொடுக்கின்ற நிதி எவ்வளவு, அரசு அதை முறையாகச் செலவிடுகின்றதா என்பதை தங்கள் மூலமாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்விப் போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

28—

மீன் அங்காடியை இடமாற்றுதல்

***23650—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகரில் ஆபீசர்ஸ் லைனில் உள்ள மீன் அங்காடியை ஒதுக்குப்புறமான இடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான மீன் மற்றும் இறைச்சி அங்காடியை நகராட்சிக்குச் சொந்தமான, உபயோகத்தில் இல்லாமல் இருக்கும் பயணியர் விடுதி அமைந்துள்ள இடத்தில் மாற்றியமைக்க வேலூர் நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரத்தில் மையமான ஒரு பகுதியில் ஆபீசர்ஸ் லைனில் இந்த மீன் மார்க்கெட் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. அந்த மீன் மார்க்கெட்டிலிருந்து வரக்கூடிய துர்நாற்றம் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய அனைத்து வியாபார ஸ்தலங்களையும் பாதிக்கிறது. எதிரில் இருக்கக்கூடிய கோட்டை மைதானத்தில் பொதுக் கூட்டம் நடக்கிறபோதும் சரி, மற்ற நேரங்களிலும் சரி, அங்கே வீசக்கூடிய துர்நாற்றம் மற்றவை எல்லாம் அங்கே சுகாதாரக்கேட்டை விளைவித்துக்கொண்டிருக்கிற காரணத்தினாலே மக்களுடைய கோரிக்கை, அதை ஒதுக்குப்புறமான ஒரு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று பல காலமாக வற்புறுத்தி வருகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல பதிலைத் தந்திருக்கிறார்கள். அதை நகராட்சி Travellor's Bungalow இருந்த இடத்திற்கு மாற்றுவதாகக் கூறுகிறார்கள். அந்த இடத்திலே ஒரு வணிக வளாகம் கட்டுவதற்கான proposal-ஐயும் அதே நகராட்சி இப்போது C.M.A. என்று

சொல்லப்படுகிற Commissioner of Municipal Administration-க்கு அனுப்பி வைத்திருக்கிறது. இறைச்சிக் கடையையும் அங்கே மாற்றுவதாகச் சொல்கிறீர்கள். அதேபோல, வணிக வளாகத்தையும் மாற்றுவதாக இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, ஊருக்கு ஒதுக்குப்புறமான ஏதாவதொரு இடத்திற்கு இந்த மீன் மார்க்கெட்டை எடுத்துச் செல்வதற்கு உடனடியாக போர்க்கால அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா? ஏற்கெனவே, Travellors Bungalow இடிந்து விழுந்த இடத்தில் வணிக வளாகம் கட்டப்படுகிற proposal எந்த நிலையில் இருக்கிறது? அந்த இடத்திற்கு இதைக் கொண்டுபோக முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான மீன் இறைச்சி அங்காடி நகரின் பிரதான சாலையான Barracks மைதானம் ரோடு - Officers' Line-ஐ ஒட்டியுள்ள இடத்தில் இயங்கி வருகிறது. மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதியில் மீன் மார்க்கெட் இயங்குவது பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளதாகக் கருதப்பட்டாலும், வணிக செயல்பாடுகள் நிறைந்த அந்தப் பகுதியில் வணிக வளாகம் கட்டுவதால் நகராட்சி வருமானம் பெருக இயலும் என்பதாலும், மீன் மார்க்கெட் இடத்தில் வணிக வளாகம் கட்ட வடிவமைப்பு வரைபடம் நகர ஊரமைப்புத் துறை இயக்குநர், வேலூர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்போது Officers Line-ல் இயங்கிவரும் மீன் மற்றும் இறைச்சி அங்காடியை Infantry சாலையை ஒட்டி வார்டு எண் 5, பிளாக் 11, நகர் அளவு எண் 512/1, 2-ல் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான, உபயோகத்தில் இல்லாமலிருக்கும் பயணியர் விடுதி இடத்தில் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி இடம் முழுமைத் திட்டத்தில் கலப்புக் குடியிருப்பு உபயோகத்தில் இருந்து வருகிறது. எனவே, அந்த நிலப் பயன் கலப்புக் குடியிருப்புப் பகுதியிலிருந்து வணிக உபயோகத்திற்காக மாற்றம் செய்யக் கோரி வேலூர் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு வேலூர் நகராட்சியால் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர்த் திட்டக் குழுமத்தின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி கருத்துருவின்மீது நிலப் பயன்மாற்ற உத்தரவு பெறப்பட்ட பின்பு மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த வேலூர் நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.